26.03.2026 OS.No.120/2024 PW2 Name :.**சந்திரலேகன்**

குறுக்கு விசாரணை

1. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வாதியும் நானும் ஆண்டியப்பனூர் கிராமத்தை சார்ந்தவர்கள். வாதியின் வீட்டிலிருந்து சுமார் 1 1/2 கி.மீ தொலைவில் என் வீடு உள்ளது. வாதி என்னுடைய மாமனார். நான் விவசாயம் செய்கிறேன். பிரதிவாதிகளை சுமார் 10 ஆண்டுகளாக தெரியும். 2017ம் ஆண்டு ரூ.53,000/- பணத்தை இரண்டு முறை மொத்தம் ரூ.1,06,000/- கடனாக வாதியிடமிருந்து பிரதிவாதிகள் பெற்றனர். அது வாதிக்கு விவசாயம் மூலம் கிடைத்த வருமானம் ஆகும்.
2. வங்கியிலிருந்து வாதி பணம் எதுவும் எடுத்துவரவில்லை. வாதி ரொக்கமாக பணம் வைத்திருந்தார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யபடவில்லை. என்னை தவிர கடனுறுதி சீட்டில் வினாயகம் என்பவரும் கையெழுத்து போட்டார். அவரும் வாதிக்கு உறவினர் ஆவார். மேற்குறிப்பில் பிரதிவாதிகள் கையெழுத்து செய்த விவரத்தை பிரமாண பத்திரத்தில் கூறவில்லை. பிரதிவாதிகள் தான் கடனுறுதி சீட்டு ஆவணங்களை வாங்கி வந்தார்கள். எங்கிருந்து வாங்கி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது.
3. வாதியிடமிருந்து வாங்கி சென்றார்கள். கடனுறுதி சீட்டில் முதலாவது சாட்சியாக வினாயகம் கையெழுத்து போட்டுள்ளார். இரண்டு கடனுறுதி சீட்டுகளும் அதே போன்றுதான் உள்ளது. பாலசுந்தரம் என்பவர் கடனுறுதி சீட்டை எழுதினார். எந்த தேதியில் எங்கு வைத்து எழுதினார்

என்று தற்போது நியாபகம் இல்லை. கடனுறுதி சீட்டில் இரண்டு ரெவிண்யு ஸ்டாம்பு ஒட்டபட்டுள்ளது. பிரதிவாதிகள் மொத்தம் கையெழுத்து போட்டார்களா என்று தற்போது நியாபகம் இல்லை.

4. கடனுறுதி சீட்டுகள் எழுதபட்டு சுமார் 9 ஆண்டுகள் ஆவதால் தற்போது எனக்கு நியாபகம் இல்லை. பாலசுந்தரம் மளிகை கடை வைத்துள்ளார். கடன் பணம் கொடுத்த அதே தேதியில் கடனுறுதி சீட்டுகள் எழுதபட்டுள்ளது. மேற்குறிப்பு ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை. மேற்குறிப்பை பாலசுந்தரம் எழுதியுள்ளார். வாதி வட்டிக்கு பணம் கொடுப்பவர்தான். லேவாதேவி தொழிலும் வாதி செய்கிறார். அந்த விவரங்கள் எனக்கு தெரியும். மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது.

5. வழக்கறிஞர் அறிவிப்பு விவரங்கள் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் என்ன காரணத்திற்காக பணம் கடன் வாங்கினார் என்பது எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் வாதியிடம் வாங்கிய பணத்தை ஏற்கனவே திருப்பி செலுத்திவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 26/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.26 17:23:08 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.